B

KANCHIPURAM DT

# அரையாண்டு பொதுத்தேர்வு - 2023

## பன்னிரெண்டாம் வகுப்பு

பதிவு எண் :

## கணக்குப்பதிவியல்

நேரம் : 3.00 மணி

பகுதி - அ

மதிப்பெண்கள் : 90

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 20 x 1 = 20

1. முழுமை பெறா பதிவேடுகளை பொதுவாக பராமரித்து வருவது
அ) நிறுமம் ஆ) அரசு
இ) தனியாள் வணிகம் ஈ) பன்னாட்டு நிறுவனங்கள்

2. பெறுதல்கள் (ம) செலுத்தல்கள் கணக்கின் இருப்பு காட்டுவது
அ) அந்த ஆண்டில் ஏற்பட்ட நட்டம்
ஆ) அந்த ஆண்டில் செலவுகளை காட்டிலும் மிகுதியான வருமானம்
இ) அந்த ஆண்டின் மொத்த ரொக்க செலுத்தல்கள்
ஈ) அந்நாளைய ரொக்க (ம) வங்கி இருப்பு

3. கூட்டாளிகளுக்கிடையே கூட்டாண்மை ஒப்பந்தம் இல்லாதபோது முதல் மீது வட்டி
அ) வழங்கப்படுவதில்லை ஆ) வங்கி வீதத்தில் வழங்கப்படும்
இ) ஆண்டுக்கு 5% வழங்கப்படும் ஈ) ஆண்டுக்கு 6% வழங்கப்படும்

4. உயர் இலாபம் பின்வரும் இரண்டிற்கும் இடையேயான வேறுபாடாகும்.
அ) பயன்படுத்தப்பட்ட முதல் (ம) சராசரி இலாபம்
ஆ) சொத்துகள் (ம) பொறுப்புகள்
இ) சராசரி இலாபம் (ம) சாதாரண இலாபம்
ஈ) நடப்பு ஆண்டின் இலாபம் (ம) சராசரி இலாபம்

5. மறுமதிப்பீட்டு க/கு ஒரு
அ) சொத்து க/கு ஆ) பெயரளவு க/கு இ) ஆள்சார் க/கு ஈ) ஆள்சாரா க/கு

6. கூட்டாண்மை நிறுவனத்திலிருந்து கூட்டாளி விலகலின் போது பகிர்ந்து தரா இலாபங்கள் (ம) நட்டங்கள் கூட்டாளிகளுக்கு இந்த அடிப்படையில் பகிரப்படுகிறது.
அ) புதிய இலாபப் பகிர்வு விகிதம் ஆ) பழைய இலாபப் பகிர்வு விகிதம்
இ) ஆதாய விகிதம் ஈ) தியாக விகிதம்

7. ஒறுப்பிழப்பு செய்யும்போது பங்கு முதல் கணக்கு எதில் பற்று வைக்கப்படுகிறது?
அ) முகமதிப்பு ஆ) பெயரளவு மதிப்பு
இ) செலுத்தப்பட்ட தொகை ஈ) அழைக்கப்பட்ட தொகை

8. இருப்புநிலைக் குறிப்பு, வணிக நிறுவனத்தின் நிதிநிலை பற்றிய _______ தகவல்களை வழங்குகிறது.
அ) ஒரு காலகட்டத்திற்கு மேலான ஆ) ஒரு குறிப்பிட்ட நாளுக்குறிய
இ) ஒரு குறிப்பிட்ட காலத்திற்கான ஈ) குறிப்பிட்ட கணக்காண்டிற்குறிய

9. ஒரு இனம் மற்றொரு இனத்தோடு பெற்றிருக்கும் தொடர்பினை கணிதவியல் முறையில் கூறுவது
அ) முடிவு ஆ) விகிதம் இ) மாதிரி ஈ) தீர்மானம்

10. பயனரின் தேவைக்கேற்ப தயாரிக்கப்படும் கணக்கியல் அறிக்கையானது
அ) வழக்கமான கணக்கியல் அறிக்கை ஆ) குறிப்பிட்ட நோக்க அறிக்கை
இ) இருப்பாய்வு ஈ) இருப்புநிலைக் குறிப்பு

11. உரிமையாளரின் சொத்துக்கள் ₹85,000 (ம) பொறுப்புக்கள் ₹21,000 எனில் அவருடைய முதல் தொகை

அ) ₹85,000 ஆ) ₹1,06,000 இ) ₹21,000 ஈ) ₹64,000

12. உயில்கொடை ஒரு

அ) வருவாயின செலவு ஆ) முதலினச் செலவு

இ) வருவாயின வரவு ஈ) முதலின வரவு

13. ஒரு கூட்டாளி ஒவ்வொரு மாத நடுவிலும் ஒரு குறிப்பிட்ட தொகையை வழக்கமாக எடுத்துக்கொள்ளும் போது, அந்த எடுப்புகள் மீது கணக்கிடப்படும் வட்டிக்குரிய மாதங்கள் சராசரியாக

அ) 5.5 மாதம் ஆ) 6 மாதம் இ) 12 மாதம் ஈ) 6.5 மாதம்

14. ஒரு வியாபாரத்தின் மொத்த மூலதன மதிப்பு ₹1,00,000, சொத்துக்கள் ₹1,50,000 (ம) பொறுப்புக்கள் ₹80,000. மூலதனமாக்க முறையில் நற்பெயரின் மதிப்பு

அ) ₹40,000 ஆ) ₹70,000 இ) ₹1,00,000 ஈ) ₹30,000

15. கூட்டாளியின் புதிய இலாபப் பகிர்வை விட பழைய இலாபப் பகிர்வு விகிதம் அதிகமாக இருந்தால் அவ்வேறுபாடு அழைக்கப்படுவது

அ) முதல் விகிதம் ஆ) தியாக விகிதம் இ) ஆதாய விகிதம் ஈ) இவற்றுள் எதுவுமில்லை

16. A, B, C என்ற கூட்டாளிகள் 4:2:3 என்ற விகிதத்தில் இலாப நட்டத்தை பகிர்ந்து வந்தனர். தற்போது C விலகுகிறார். A, B யின் புதிய இலாப விகிதம்

அ) 4 : 3 ஆ) 3 : 4 இ) 2 : 1 ஈ) 1 : 2

17. சொத்துக்களை வாங்கி பங்குகள் வெளியிடும்போது வரவு வைக்கப்படும் க/கு

அ) விற்பனையாளர் க/கு ஆ) சொத்துகள் க/கு

இ) பங்கு முதல் க/கு ஈ) வங்கி க/கு

18. நிதிநிலை அறிக்கைகள் வெளிக்காட்டாது

அ) பணம் சாரா தகவல்கள் ஆ) கடந்தகால தகவல்கள்

இ) குறுகியகால தகவல்கள் ஈ) நீண்டகால தகவல்கள்

19. சரக்கிருப்பு (ம) முன்கூட்டி செலுத்திய செலவுகள் நீங்கலாக உள்ள நடப்பு சொத்துகள் அழைக்கப்படுவது

அ) காப்புகள் ஆ) புலனாகும் சொத்துகள்

இ) நிதி ஈ) விரைவு சொத்துகள்

20. சம்பளக் க/கு பின்வரும் எந்த தலைப்பின் கீழ் வரும்?

அ) நேரடி வருமானங்கள் ஆ) நேரடி செலவினங்கள்

இ) மறைமுக வருமானங்கள் ஈ) மறைமுக செலவினங்கள்

## பகுதி - ஆ

II. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 30 கட்டாய வினா) **7 x 2 = 14**

21. முழுமை பெறா பதிவேடுகள் என்றால் என்ன?

22. ஆயுள் உறுப்பினர் கட்டணம் - சிறுகுறிப்பு வரைக.

23. சராசரி இலாபம் 15,000 ஆக இருக்கும்போது 2 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பை காண்க.

24. அருள் (ம) அனிதா என்ற கூட்டாளிகள் இலாப நட்டங்களை 4:3 என்ற விகிதத்தில் பகிர்ந்து வருகின்றனர். 31.3.2018 அன்று புதிய கூட்டாளியாக அஜய் என்பவர் சேர்த்துக் கொள்ளப்பட்டார். சேர்க்கையின்போது, நிறுவன ஏடுகளில் பொது காப்பு 42,000 எனக் காட்டியது. பொது காப்பினை பகிர்ந்தளிப்பதற்கான குறிபபேட்டுப் பதிவினைத் தரவும்.

25. ஆதாய விகிதம் என்றால் என்ன?

26. மிகை ஒப்பம் என்றால் என்ன?

27. நடைமுறை முதல் என்றால் என்ன?

28. கீழே கொடுக்கப்பட்டுள்ள ஆனந்த் கட்டுமான நிறுமத்தின் தகவல்களிலிருந்து விரைவு விகிதத்தை கணக்கிடவும்.

| *விவரம்* | ₹ |
|---|---|
| மொத்த நடப்பு பொறுப்புகள் | 1,00,000 |
| மொத்த நடப்பு சொத்துகள் | 2,50,000 |
| சரக்கிருப்பு | 50,000 |
| முன்கூட்டி செலுத்திய செலவுகள் | 15,000 |

29. கணக்கியல் அறிக்கைகள் என்றால் என்ன?

30. 2018 ஆம் ஆண்டில் இராஜன் என்ற கூட்டாளி எடுத்த எடுப்புகள் ₹30,000. எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 10% என விதிக்கப்பட்டது. 2018 டிசம்பர் 31 அன்றைய எடுப்புகள் மீது வட்டி கணக்கிடவும்.

## பகுதி - இ

**III. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 40 கட்டாய வினா) 7 x 3 = 21**

31. பின்வரும் விவரங்களிலிருந்து விடுபட்ட தகவலை காண்க.

| | ₹ |
|---|---|
| 2018 ஏப்ரல் 1 அன்று முதல் | 40,000 |
| 2019 மார்ச் 31 அன்று முதல் | 50,000 |
| அவ்வாண்டில் கொண்டு வந்த கூடுதல் முதல் | 7,000 |
| அவ்வாண்டில் எடுப்புகள் | ? |
| அவ்வாண்டில் இலாபம் | 8,000 |

32. கூட்டாண்மையின் சிறப்பியல்புகளை தரவும்.

33. ஒரு நிறுவனத்தின் கடந்த ஐந்து ஆண்டுகளின் இலாபங்கள் பின்வருமாறு.
2014 : ₹4,000 ; 2015 : ₹3,000 ; 2016 : ₹5,000 ; 2017 : ₹4,500 ; 2018 : ₹3,500
5 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 3 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் காண்க.

34. அபர்ணா (ம) பிரியா இருவரும் கூட்டாளிகள். அவர்கள் தங்கள் இலாப (ம) நட்டங்களை 3:2 என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். பிருந்தா 1/5 இலாப பங்கிற்கு கூட்டாண்மையில் சேருகிறார். அவர் தமது நற்பெயர் பங்காக ₹10,000 கொண்டு வருகிறார். கூட்டாளிகளின் முதல் கணக்குகள் மாறுபடும் முதல் முறையில் கணக்கிடப்படுகிறது. கூட்டாளிகள் தமது நற்பெயர் தொகை முழுவதையும் எடுத்துக்கொண்டனர். இதற்கு தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளை தரவும்.

35. கூட்டாளி விலகலின்போது செய்யப்பட வேண்டிய சரிகட்டுதல்களை பட்டியலிடவும்.

36. மருது நிறுமம் ₹10 மதிப்புள்ள 150 பங்குகளை பங்கொன்று ₹4 இறுதி அழைப்பு தொகை செலுத்த தவறியதால் ஒறுப்பிழப்பு செய்தது. அவற்றில் 100 பங்குகளை பங்கொன்றுக்கு ₹9 வீதம் மறுவெளியீடு செய்தது. ஒறுப்பிழப்பு (ம) மறுவெளியீடு குறிப்பேட்டு பதிவுகளை தரவும்.

37. குமார் நிறுமத்தின் பின்வரும் விவரங்களிலிருந்து 2018 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பொது அளவு வருமான அறிக்கையை தயார் செய்யவும்.

| *விவரம்* | *2017-18 (₹)* |
|---|---|
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 5,00,000 |
| இதர வருமானம் | 20,000 |
| செலவுகள் | 3,00,000 |

38. ஹரிணி நிறுமத்தின் கடன் விற்பனை மூலம் பெற்ற வருவாய் தொகை ₹9,60,000. அந்த கணக்காண்டின் இறுதியில் இதன் வியாபார கடனாளிகள் (ம) பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு தொகை முறையே ₹1,00,000 மற்றும் ₹60,000 கணக்குகளின் மூலம் பெற வேண்டியவைகளின் சுழற்சி விகிதம் காண்க.

39. கணக்கியல் சான்றாவணம் குறித்து சிறு குறிப்பு எழுதவும்.

40. ஒரு சங்கத்தின் பின்வரும் விவரங்களிலிருந்து 2018ஆம் ஆண்டு சந்தா மூலம் பெற்ற வருமானத்தை கணக்கிடவும்.

| *விவரம்* | *1.1.2018 (₹)* | *31.12.2018 (₹)* |
|---|---|---|
| பெறவேண்டிய சந்தா | 10,000 | 7,000 |
| முன்கூட்டிப் பெற்ற சந்தா | 3,000 | 5,000 |

2018 ஆம் ஆண்டில் பெற்ற சந்தா ₹1,50,000

பகுதி - ஈ

**IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **7 x 5 = 35**

41. அ) பின்வரும் விவரங்களிலிருந்து மொத்த விற்பனையை காண்க.

| *விவரம்* | ₹ |
|---|---|
| 2017 ஏப்ரல் 1 அன்று கடனாளிகள் | 1,50,000 |
| 2017 ஏப்ரல் 1 அன்று பெறுதற்குறிய மாற்றுச்சீட்டு | 40,000 |
| கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | 3,90,000 |
| பெறுதற்குறிய மாற்றுச்சீட்டிற்குறிய ரொக்கம் பெற்றது | 90,000 |
| பெறுதற்குறிய மாற்றுச்சீட்டு மறுக்கப்பட்டது | 10,000 |
| விற்பனை திருப்பம் | 40,000 |
| 2018 மார்ச் 31 அன்று பெறுதற்குறிய மாற்றுச்சீட்டு | 30,000 |
| 2018 மார்ச் 31 அன்று கடனாளிகள் | 1,30,000 |
| ரொக்க விற்பனை | 2,00,000 |

*(அல்லது)*

ஆ) நவீன் நிறுமத்தின் பின்வரும் வணிக நடவடிக்கைகளிலிருந்து

i) மொத்த இலாப விகிதம் ii) நிகர இலாப விகிதம்

iii) இயக்க அடக்கவிலை விகிதம் iv) இயக்க இலாப விகிதம்

கணக்கிடவும்

**இலாப நட்ட அறிக்கை**

| விவரம் | | ₹ |
|---|---|---|
| I | விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 20,000 |
| II. | இதர வருமானம் | |
| | முதலீடு மூலம் வருவாய் | 200 |
| III. | மொத்த வருவாய் (I + II) | 20200 |
| IV. | செலவுகள் : | |
| | கொள்முதல் | 17,000 |
| | சரக்கிருப்பு மாற்றம் (–) | 1,000 |
| | நிதிசார் செலவுகள் | 300 |
| | இதர செலவுகள் (நிர்வாகம் (ம) விற்பனை | 2,400 |
| | மொத்த செலவுகள் | 18,700 |
| V. | வரிக்கு முன்னர் உள்ள நிகர இலாபம் (III – IV) | 1,500 |

42. அ) கீழ்க்காணும் திருச்சி மனமகிழ் மன்றத்தின் பெறுதல்கள் (ம) செலுத்தல்கள் கணக்கிலிருந்து 2018 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் (ம) செலவினக் கணக்கினைத் தயாரிக்கவும்.

| பெறுதல்கள் | ₹ | செலுத்தல்கள் | ₹ |
|---|---|---|---|
| தொடக்க இருப்பு | 11,000 | அறைகலன் வாங்கியது | 10,000 |
| ரொக்கம் | | வாடகை | 2,800 |
| பங்காதாயம் பெற்றது | 27,600 | செயலர் மதிப்பூதியம் | 15,000 |
| பழைய செய்தித்தாள் விற்றது | 3,000 | தபால் செலவுகள் | 1,700 |
| உறுப்பினர் சந்தா | 31,000 | பொதுச் செலவுகள் | 4,350 |
| பாதுகாப்பு பெட்டக வாடகை | 8,000 | அச்சு (ம) எழுதுபொருள்கள் | 45,000 |
| முதலீடுகள் மீதான வட்டி | 1,250 | தணிக்கை கட்டணம் | 5,000 |
| அறைகலன் விற்றது | 5,000 | இறுதி இருப்பு: | |
| (ஏட்டு மதிப்பு ₹4400) | | கை ரொக்கம் | 3,000 |
| | **86,850** | | **86,850** |

**(அல்லது)**

ஆ) Tally ERP 9 - ல் பொதுவாக பயன்படுத்தப்படும் சான்றாவணங்களின் வகைகளைக் குறிப்பிடவும்.

43. அ) பின்வரும் தகவல்களிலிருந்து, மன்னன் (ம) சேவகன் எனும் கூட்டாளிகளின் முதல் கணக்குகளை அவர்களின் முதல் மாறுபடும் முதலாக இருக்கும்போது தயாரிக்கவும்.

| விவரம் | மன்னன் (₹) | சேவகன் (₹) |
|---|---|---|
| 2018.1.1. அன்று முதல் (வரவிருப்பு) | 2,00,000 | 1,75,000 |
| 2018 ஆம் ஆண்டின் எடுப்புகள் | 40,000 | 35,000 |
| எடுப்புகள் மீதான வட்டி | 1,000 | 500 |
| 2018 ம் ஆண்டின் இலாப பங்கு | 21,000 | 16,500 |
| முதல் மீது வட்டி | 12,000 | 10,500 |
| ஊதியம் | 18,000 | Nil |
| கழிவு | Nil | 2,500 |

**(அல்லது)**

ஆ) கோயம்புத்தூர் கிரிக்கெட் மன்றத்தின் 2019.3.31 ம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் (ம) செலுத்தல்கள் கணக்கு தயார் செய்யவும்.

| விவரம் | ₹ | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|---|
| வங்கி மேல்வரைப்பற்று (1.4.2018) | | 6,000 | மதிப்பூதியம் செலுத்தியது | 2,800 |
| கைரொக்கம் (1.4.18) | | 1,000 | நீர் (ம) மின்சார கட்டணம் | 700 |
| மைதான பராமரிப்பு கூலி செலுத்தியது | | 2,000 | விளையாட்டு போட்டி செலவுகள் | 2,600 |
| சந்தா பெற்றது | | | விளையாட்டு பொருட்கள் வாங்கியது | 1,900 |
| முந்தைய ஆண்டு | 500 | | விளையாட்டு போட்டி நிதி வரவுகள் | 5,200 |
| நடப்பு ஆண்டு | 9600 | | உயில் கொடை பெற்றது | 2,000 |
| எதிர்வரும் ஆண்டு | 400 | 10,500 | ரொக்க இருப்பு (31.3.19) | 300 |
| கூலி கொடுபட வேண்டியது | | 2,200 | அரங்கம் அமைக்க நன்கொடை பெற்றது | 2,000 |
| கடன் மீதான வட்டி செலுத்தியது | | 2,000 | | |

44. அ) ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கடந்த 3 வருடங்களாக ஈட்டிய நிகர இலாபங்கள் பின்வருமாறு :

2016 : ₹20,000 ; 2017 : ₹17,000 and 2018 : ₹23,000

மேற்குறிப்பிட்ட காலம் முழுவதும் நிறுவனத்தில் பயன்படுத்தப்பட்ட முதல் ₹80,000. நிறுவனம் கொண்டுள்ள இடரினை கருத்தில்கொண்டு, பயன்படுத்தப்பட்ட முதல் மீதான சாதாரண இலாபம் வீதம் 15% என கருதப்பட்டது. உயர் இலாபத்தில் 2 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பை கணக்கிடவும்.

*(அல்லது)*

ஆ) பின்வரும் விவரங்களைக் கொண்டு பாலை வரையறு நிறுமத்தின் போக்கு பகுப்பாய்வினைக் கணக்கிடவும்.

| விவரம் | ₹ இலட்சங்களில் | | |
|---|---|---|---|
| | வருடம் 1 | வருடம் 2 | வருடம் 3 |
| I. பங்கு மூலதனம் (ம) பொறுப்புகள் | | | |
| பங்குதாரர் நிதி | 250 | 275 | 300 |
| நீண்டகால பொறுப்புகள் | 100 | 125 | 100 |
| நடப்பு பொறுப்புகள் | 50 | 40 | 80 |
| **மொத்தம்** | **400** | **440** | **480** |
| II. சொத்துகள்: | | | |
| நிலைச் சொத்துகள் | 300 | 360 | 390 |
| நடப்பு சொத்துகள் | 100 | 80 | 90 |
| **மொத்தம்** | **400** | **440** | **480** |

45\. அ) ரகு (ம) சாம் எனும் கூட்டாளிகள் முறையே 3:2 எனும் விகிதத்தில் இலாப நட்டங்களை பகிர்ந்து வந்தனர். 2017.3.31 அன்று அவர்களின் இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு:

| பொறுப்புகள் | ₹ | ₹ | சொத்துகள் | ₹ | ₹ |
|---|---|---|---|---|---|
| முதல் க/கு | | | இயந்திரம் | | 30,000 |
| ரகு | 40,000 | | அறைகலன் | | 10,000 |
| சாம் | 30,000 | 70,000 | சரக்கிருப்பு | | 10,000 |
| கடனீந்தோர் | | 30,000 | கடனாளிகள் | 21,000 | |
| | | | (–) ஐயக்கடன் | | |
| | | | ஒதுக்கு | 1,000 | 20,000 |
| | | | வங்கி | | 30,000 |
| | | **1,00,000** | | | **1,00,000** |

1.4.2017 அன்று பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு பிரகாஷ் என்பவரை கூட்டாண்மையில் சேர்த்தனர்.

அ) பிரகாஷ் ₹10,000 முதல் கொண்டு வந்தார்

ஆ) இயந்திரம் ₹24,000 என மதிப்பிடப்பட்டது

இ) அறைகலன் மதிப்பில் ₹3,000 குறைப்பது

ஈ) வாரா ஐயக்கடன் ஒதுக்கை ₹3,000 என அதிகரிப்பது.

உ) ஏடுகளில் பதிவு பெறாமலுள்ள கணக்குகளின் மூலம் பெற வேண்டியவைகளின் மதிப்பு ₹1,000 பதிவு செய்தல்

மறு மதிப்பீட்டு க/கு மற்றும் முதல் க/கு தயார் செய்க.

*(அல்லது)*

அ) பாரத் நிறுமம் ₹10 மதிப்புள்ள 100000 பங்குகளை முக மதிப்பில் பொதுமக்களுக்கு வெளியிட்டது. பங்குகள் மீதான பணம் செலுத்த வேண்டிய விபரங்கள் பின்வருமாறு:

| | |
|---|---|
| விண்ணப்பத்தின் போது | ₹5 |
| ஒதுக்கீட்டின் போது | ₹3 |
| முதலாவது (ம) இறுதி அழைப்பின் போது | ₹2 |

120000 பங்குகளுக்கு விண்ணப்ப தொகை பெறப்பட்டது. கூடுதல் விண்ணப்ப தொகை உடனடியாக திருப்பி செலுத்தப்பட்டது. மேற்கண்டவற்றை பதிவு செய்ய குறிப்பேட்டு பதிவுகளை தரவும்.

46\. அ) நிலை முதல் முறைக்கும், மாறுபடும் முதல் முறை க்கும் இடையேயான வேறுபாடுகளை தரவும்.

*(அல்லது)*

ஆ) அப்துல் வரையறு நிறுமத்தின் ஒப்பீட்டு வருமான அறிக்கையை தயார் செய்க.

| விவரம் | 2015-16 | 2016-17 |
|---|---|---|
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 3,00,000 | 3,60,000 |
| இதர வருமானம் | 1,00,000 | 60,000 |
| செலவுகள் | 2,00,000 | 1,80,000 |
| வருமான வரி | 30% | 30% |

47. அ) ராஜு முறையான கணக்குகளை பின்பற்றுவதில்லை. அவருடைய பதிவேடுகளிலிருந்து பெறப்பட்ட தகவல்கள் பின்வருமாறு:

| *விவரம்* | *1.1.2018* | *31.12.2018* |
|---|---|---|
| கை ரொக்கம் | 80,000 | 90,000 |
| சரக்கிருப்பு | 1,80,000 | 1,40,000 |
| கடனாளிகள் | 90,000 | 2,00,000 |
| கடனீந்தோர் | 1,30,000 | 1,95,000 |
| வங்கி கடன் | 60,000 | 60,000 |
| செலுத்தற்குதரிய மாற்றுச்சீட்டு | 80,000 | 45,000 |
| பொறி (ம) இயந்திரம் | 1,70,000 | 1,70,000 |

அவ்வாண்டில் அவர் கொண்டுவந்த கூடுதல் முதல் ₹50,000 (ம) அவர் வியாபாரத்திலிருந்து தன்னுடைய சொந்த பயனுக்காக மாதந்தோறும் ₹2,500 எடுத்துக்கொண்டார். மேற்கண்ட தகவல்களிலிருந்து மேற்கண்ட தகவல்களிலிருந்து இலாப நட்ட அறிக்கை தயாரிக்கவும்.

***(அல்லது)***

ஆ) மஞ்சு, சாரு, லாவண்யா என்ற கூட்டாளிகள் தங்கள் இலாப நட்டங்களை 5:3:2 என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். 2018.3.31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு.

| *பொறுப்புகள்* | ₹ | ₹ | *சொத்துகள்* | ₹ |
|---|---|---|---|---|
| முதல் க/கு | | | கட்டடம் | 1,00,000 |
| மஞ்சு | 70,000 | | அறைகலன் | 80,000 |
| சாரு | 70,000 | | சரக்கிருப்பு | 60,000 |
| லாவண்யா | 70,000 | 2,10,000 | கடனாளிகள் | 40,000 |
| கடனீந்தோர் | | 40,000 | ரொக்கம் | 20,000 |
| இலாப நட்ட க/கு | | 50,000 | | |
| | | **3,00,000** | | **3,00,000** |

பின்வரும் சரிகட்டுதல்களுக்கு உட்பட்டு மஞ்சு என்பவர் 31.3.2018 அன்று கூட்டாண்மையிலிருந்து விலகினார்.

i) சரக்கிருப்பு மதிப்பில் ₹10,000 குறைக்க வேண்டும்

ii) ஐயக்கடன் ஒதுக்கு ₹3,000 உருவாக்க வேண்டும்

iii) கட்டடத்தில் ₹28,000 மதிப்பேற்றம் செய்ய வேண்டும்.

iv) மஞ்சுவுக்கு செலுத்த வேண்டிய இறுதி தொகை இன்னும் செலுத்தவில்லை

மறுமதிப்பீட்டு க/கு, கூட்டாளி விலகலுக்குப்பின் முதல் க/கு தயார் செய்க.

******